**செய்தி வெளியீடு எண்: 006** **நாள் : 07.01.2015**

# செய்தி வெளியீடு

## தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை எண்மப்படுத்த அரசு நிதி ஒதுக்கீடு

தமிழ் வளர்ச்சித் துறை மானியக்கோரிக்கையின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ‘தமிழ்மொழிதான் உலகத்தின் மூத்தமொழி என்ற சொல்லிற்கு காரணமாக இருப்பது தமிழின் வேர்ச்சொற்களாகும். வேர்ச்சொற்களை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்ட அகரமுதலித் திட்ட இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 13,327 பக்கங்கள் அடங்கிய 31 தொகுதிகளைக் கொண்ட நூல்களை வெளியிட்டுள்ளது. இந்த முப்பத்தொரு தொகுதிகளும் எண்மப்படுத்தப் பெற்று (digitize) தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் வெளியிடப் பெறும்’ என அறிவிக்கப்பட்டதை செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**